தமிழ் நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
மற்றும் இந்திய வானிலைத் துறை இணைந்து வழங்கும்
வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள் - காஞ்சிபுரம் & செங்கல்பட்டு மாவட்டம்
வேளாண் அறிவியல் நிலையம் – காஞ்சிபுரம்.
( 12.02.2022 முதல் 16.02.2022, 8.30 மணி வரை )

**அறிக்கை எண் 012/ கே.வி.கே/கே.பி.எம்/2022** | ***நாள்* & தேதி**: வெள்ளிக்கிழமை & 11.02.2021

**வானிலை முன்னறிவிப்பு** (12.02.2022 முதல் 16.02.2022, 8.30 மணி வரை)

| | 12.02.2022 | 13.02.2021 | 14.02.2021 | 15.02.2022 | 16.02.2021 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ.) | **00** | **00** | **00** | **00** | **00** |
| அ.வெப்பநிலை | 31 | 32 | 32 | 32 | 32 |
| கு. வெப்பநிலை | 22 | 22 | 23 | 23 | 23 |
| ஒப்புஈரப்பதம் I | 75 | 75 | 75 | 75 | 75 |
| ஒப்புஈரப்பதம் II | 55 | 55 | 55 | 55 | 50 |
| காற்றின்வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 10 | 08 | 08 |
| காற்றின் திசை | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு | கிழக்கு வடகிழக்கு | வடகிழக்கு |
| மேக மூட்டம் | ஓரளவு தெளிவாக காணப்படும் | ஓரளவு தெளிவாக காணப்படும் | பெரும்பாலும் தெளிவாக காணப்படும் | தெளிவாக காணப்படும் | தெளிவாக காணப்படும் |

**வானிலை முன்னறிவிப்பு தகவல்கள்:** அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கும் மழைக்கு வாய்ப்பின்றி வறண்ட வானிலேயே நிலவ வாய்ப்புள்ளது. வெப்பநிலை அதிகபட்சமாக 31-32 டிகிரி செல்சியஸ் வரையும் குறைந்தபட்சமாக 22-23 டிகிரி செல்சியஸ் வரையும் பதிவாக்கலாம். மேலும் காற்றானது மணிக்கு 08-10 கி.மீ. வேகத்தில் வடகிழக்கு - கிழக்கு தென்கிழக்கு திசையில் வீசலாம். காற்றின் ஈரப்பதமானது 50-75% வரை பதிவாக்கலாம். வானம் பகலில் தெளிவாக ஒரு சில நாட்களில் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். **பொது அறிவிப்பு:** வரும் 16.02.2022 - 22.02.2022 ஆகிய நாட்களில் தமிழ் நாடு மற்றும் புதுவையை பொறுத்தவரையில் மழையானது இயல்பை விட அதிகரித்து காணப்படலாம்.

## வானிலை சர்ந்த வேளாண் ஆலோசனைகள்

| பயிர் | பருவம் | ஆலோசனைகள் |
|---|---|---|
| பொது அறிவிப்பு | | மழைக்கு வாய்ப்பில்லை என்பதினால் விவசாயிகள் மண்ணின் ஈரப்பத்தினை அறிந்து பயிர்களுக்கு பாசனம் செய்யலாம். |
| குறுஞ்செய்தி | | உளுந்தில் மஞ்சள்சோகை ஏற்பட வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோய் பரப்பும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த போதிய பயிர் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்க்கொள்ளலாம். |
| பயிர்கள் - நெல் | இளம் வளர்ச்சி பருவம் | நெல் வயலில் இலை சுருட்டுப்புழு தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்க அறிகுறிகள் தென்படுமாயின் ஹக்டருக்கு குளோரோடேரினிலிபுருள் 150 கிராம் அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| உளுந்து | இளம் வளர்ச்சி பருவம் | உளுந்து பயிரில் இலைகளை தின்று அழிக்கும் புகையிலை புழுகள் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சியை கட்டுப்படுத்த டைகுளோர்வாஸ் மருந்தினை ஹக்கடருக்கு 1 லி வீதம் தெளிக்கலாம். |
| உளுந்து | இளம் வளர்ச்சி பருவம் | உளுந்து பயிரில் மஞ்சள்சோகை நச்சுயிரி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோயினை பரப்பும் வெள்ளை ஈகளை கட்டுப்படுத்த நொச்சி இலை கரைசல் 10% அல்லது வேப்ப இலை சாறு 3 மி.லி/ லிட்டர் நீரில் கலந்து விதைத்த 30ஆம் நாளில் தெளிக்கலாம். |
| பச்சை பயறு | இளம் வளர்ச்சி பருவம் | பச்சை பயிரில் இலைகளில் வெள்ளை நிற பொடி திட்டுக்களை ஏற்படுத்தும் சாம்பல் நோய் தாக்க வாய்ப்புள்ளதால் நோயினை கட்டுபடுத்த ப்ரோபிகோனசோல் மருந்தினை 500 மி.லி/ ஹெக்டர் என்ற அளவில் தெளிக்கலாம். |
| நிலக்கடலை | இளம் வளர்ச்சி பருவம் | நிலக்கடலை பயிரில் இலையின் பச்சையத்தைச் சுரண்டி உண்ணும் புகையிலை வெட்டுப்புழுகள் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சியை |

| | | |
|---|---|---|
| | | கட்டுப்படுத்த டைகுளோர்வாஸ் மருந்தினை ஹக்கடருக்கு 750 மி.லி வீதம் தெளிக்கலாம். |
| தென்னை | மரம் | விவசாயிகள் தென்னையை தாக்கும் சுருள் வெள்ளை ஈயை கட்டுப்படுத்த வெப்ப எண்ணெய் 3% தண்ணிரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| மிளகாய் | இளம் பயிர்கள் | மிளகாய் பயிரில் இலைபேன் தாக்க வாய்ப்புள்ளது. பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயிகள் இமிடாக்லோர்பிட் 3.0 மி / 10 லி தண்ணிரில் கலந்து தெளிக்கலாம். |
| கத்தரி மற்றும் வெண்டை | இளம் பயிர்கள் | கத்தரி மற்றும் வெண்டை பயரில் குருத்து புழு தாக்க வாய்ப்புள்ளது. பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயிகள் இனக்கவர்ச்சிப்பொறி ஏக்கருக்கு 5 என்றளவில் வைத்து கட்டுப்படுத்தலாம். |
| கால்நடை அறிவியல் | கறவை மாடுகள் | கால்நடைகளுக்கு ஓட்டுண்ணி தாக்கத்தினை தவிர்க்க ஏரி, குளம் போன்ற நீர் நிலைகளின் அருகில் மேச்சலுக்கு விடுவதினை தவிர்க்கலாம். விவசாயிகள் கால்நடைகளுக்கு 30-50 கிராம் தாதுப்பை அடர்த்தீவனத்துடன் கலந்தளிப்பதால் பாலில் கொழுப்பு சத்தினை அதிகரிக்கலாம். |
| | செம்மறி மற்றும் வெள்ளாடு | விவசாயிகள் ஆட்டுக்கொட்டகையில் தாது உப்பு கட்டிகளை கட்டிவைப்பதன் ஆடுகளில் வளர்ச்சி விகிதத்தினை அதிகரிக்கலாம். |
| மீன்வளம் | உள்நாட்டு மீன் வளர்ப்பு | வரும் ஐந்து நாட்களுக்கு வெப்பநிலை குறைந்து காணப்படலாம் என்பதால் மீன் தீவனங்களை காலை வேளையில் ஒரு மணி நேரத்திற்கு மிகாமல் தாமதப்படுத்தி அளிக்கலாம். மீன்/இறால் தீவனங்களை உலர்த்த மற்றும் காற்றோட்டமான இடத்தில் சேமித்து வைப்பதன் மூலம் பூஞ்சைகள் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம். எதிர்வரும் ஐந்து நாட்களில் நிலவ இருக்கும் குறைந்தபட்ச வெப்பநிலை மற்ற வானிலை காரணிகளை கருத்தில் கொண்டு மீன் மற்றும் இறால் பண்ணையாளர்கள் மீன் மற்றும் இறால் மாதிரிகளை சேகரித்து அதன் ஆரோக்கியத்தினை அறிந்து தக்க மேலாண்மை முறைகளை கையாளலாம். |
| | மீன் வளம் | உலர்மீன் உற்பத்திசெய்யும் மீனவர்கள் ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 3 கிலோ மீன்களை உலரவைக்கலாம். குளத்து நீரின் ஒளி உட்புகா தன்மையை கணக்கிட்டு அதனை 30-45 செ. மீ. வரை பராமரிக்கலாம். மேலும் குளத்து நீரில் கரும்பச்சை நிறம் தென்படுமாயின் பண்ணையாளர்கள் 10% வரை நீரை மாற்றியும் அல்லது 100-200 கிலோ/ ஹெக்டாருக்கு வேளாண் சுண்ணாம்பும் அளிக்கலாம். |
| | அலங்கார மீன்கள் | அலங்கார மீன் வளர்ப்பு விவசாயிகள் மீன் தொட்டிகளில் அமோனியா அளவை கட்டுப்படுத்த மீன் தொட்டிகளில் கழிவுகளை கற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள். |
| இந்த வானிலை சர்ந்த வேளாண் ஆலோசனை தகவல்கள் காஞ்சிபுர வேளாண்மை அறிவியல் நிலையம் தொழில்நுட்ப வல்லுநர்களின் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது. | | |

திட்ட அலுவலர்,
மாவட்ட வானிலை பிரிவு
வேளாண் அறிவியல் நிலையம் - காஞ்சிபுரம்